காயிதே மில்லத் கலைக் கல்லூரிகளில் நடத்தலாம் எனப் பல்கலைக் கழகம் அரசின் அனுமதி பெற்று அறிவித்தது. இந்தத் தேர்வு மையங்களை மாற்றியதை எதிர்த்து மாணவர்கள் கலகம் செய்ததால் பல்கலைக் கழகம் பகுதி நேர இரண்டாம் சட்டத் தேர்வில் தொடங்கி அனைத்துச் சட்டக் கல்வித் தேர்வுகளையும் நிறுத்தி வைத்து விட்டது. மேற்கொண்டு தேர்வுகளை எப்பொழுது ஆரம்பிப்பது என்பது பற்றியும், தேர்வு மையங்களைத் தீர்மானிப்பது குறித்தும் பல்கலைக் கழகம் தேவையான கருத்துரைகளை அனுப்பிய பின் முடிவெடுக்கப்படும்.

மாணவர்களிடையே அடிக்கடி ஏற்படும் அமைதியின்மையைத் தடுப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கல்வியமைச்சரவர்கள் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் மாணவர்கள் புத்தகங்களைப் பார்த்து எழுதுவதைத் தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தேர்வுகளைத் தள்ளி வைத்திருப்பதால் மாணவர்களிடையே பதட்ட நிலை இருப்பதாக அரசுக்குத் தகவல் எதுவும் வரவில்லை. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ). மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/1981.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 31]

ஆ. திருவாளர்கள் என். வி. என். சோமு, து. புருஷோத்தமன் காவலில் வைக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை மத்திய சிறைச் சாலைக் கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி 30-8-1981 அன்று பிற்பகல் 1.10 மணிக்கு வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

"I Submit that Thiruvalargal N.V.N.Somu, M.L.A., Son of Thiru N. V.Natarajan, residing at No.11, Subramani Street, Madras-7 and Puru shothaman, M.L.A., Son of Doraiswami, No.7, Main Road, Zackriah Colony, Kodambakkam Madras 24 were admitted as Remand Prisoners in this Prison on 29.8.1981. They were remanded by the Additional Chief Metropolitan Magistrate, Egmore, Madras in X.Cr.No. 477/81 till 11-9-1981 under Sec.143 IPC 41 C,P. Act and 7 (1) (a) Dr. L.A,Act

2. Both of them are treated as Special Class Remand Prisoners.

5. கவன ஈர்ப்புகள்.

அ. மேட்டூர் அருகில் தொப்பையாற்றில் பரிசல் விபத்து

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, "மேட்டூர் அருகிலுள்ள தொப்பையாற்றில் 15-8-1981 அன்று பரிசல் கவிழ்ந்ததால் மூன்று பேர் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

15-8-81 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் தர்மபுரி மாவட்டம் பெண்ணகரம் மருக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த சாமியண்ணன் மற்றும் எட்டுபேரும் தாங்கள் மேற்கொண்ட மரக்கரி வியாபாரத்த முடித்துக்கொண்டு சேலம் மாவட்டம் மேச்சேரியில் உள்ள மல்லிகுண்டம் பரிசல் துறையில் நல்லமணக்காடு செல்வதற்காக கொக்கராபள்ளம் என்ற இடத்தில் ஒரு பரிசலில் ஏறினர். நல்ல மணக்காட்டைச் சேர்ந்த நல்லப்பன் என்பவரது மகனாகிய கொண்டையன் (வயது 40) என்பவர் அவருக்குச் சொந்தமான இரண்டு பசுக்களையும் அப்பரிசலில் ஏற்றிக்கொண்டு அப்பரிசலை ஓட்டினார். தொப்பையாறு ஆற்றில் கொக்கராப்பள்ளம் என்னும் இடத்தில் சுமார் மாலை 6.15 மணிக்கு பசுக்களால் ஏற்படுத்தப்பட்ட தடுமாற்றம் காரணமாக அப்பரிசல் நிலை குலைந்து கவிழ்ந்துவிட்டது. பரிசலில் பயணம் செய்த 6 பேரும், மற்றும் பரிசலோட்டியும் இரண்டு பசுக்களும் தப்பிவிட்டனர். கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூவர் இவ்விபத்தில் இறந்து விட்டனர்:

1 குப்பன், வயது 30
தந்தை பெயர் திரு பொன்னப்ப கவுண்டர்

1 28—178—6